# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## *2010 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, வாரியபொல ராஜமகா விஹாரை அபிவிருத்தி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம்*

---

*(2010 ஆம் ஆண்டு சனவரி மாதம் 21 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2010, சனவரி மாதம் 22 ஆந் தேதிய* ***இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்*** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்

***விலை : ரூபா 11.00*** ***தபாற் செலவு : ரூபா 5.00***

**2010 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, வாரியபொல ராஜமகா விஹாரை அபிவிருத்தி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம்**

[*2010 ஆம் ஆண்டு சனவரி மாதம் 21 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.*]

*ச.வ.ஓ. (கூட்டி) 27/2008*

**வாரியபொல ராஜமகா விஹாரை அபிவிருத்தி மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்**

*முன்னுரை.*

*"வாரியபொல ராஜமகா விஹாரை அபிவிருத்தி மன்றம்" என அழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான மன்றமொன்று அதன் உறுப்பினர்களால் இணங்கிக்கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்கச் சொல்லப்பட்ட மன்றத்தோடு தொடர்புபட்ட எல்லாக் குறிக்கோள் களையும் கருமங்களையும் பயனுற நிறைவேற்றிக் கொண்டு நடாத்தும் நோக்கத்திற்கென இலங்கையில் தாபிக்கப்பட்டிருந்த தாதலாலும் :*

*அத்துடன் சொல்லப்பட்ட மன்றமானது எந்தக் குறிக்கோள் களுக்காகவும் கருமங்களுக்காகவும் உருவாக்கப்பட்டதோ அந்தப் பல்வேறு குறிக்கோள்களையும் கருமங்களையும் இதற்கு முன்னர் வெற்றிகரமாக நிறைவேற்றியும் கொண்டுநடாத்தியும் வந்துள்ள தாதலாலும் அது கூட்டிணைக்கப்படுவதற்கென விண்ணப்பித் துள்ளதாதலாலும் அத்துடன் அத்தகைய விண்ணப்பத்தை அனுமதித்தல் உசிதமானதாதலாலும் :*

*ஆகையால் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளு மன்றத்தால் அது பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-*

*சுருக்கப் பெயர்.*

***1.*** *இச்சட்டம், 2010 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, வாரியபொல ராஜமகா விஹாரை அபிவிருத்தி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.*

*வாரியபொல ராஜமகா விஹாரை அபிவிருத்தி மன்றத்தைக் கூட்டிணைத்தல்.*

***2.*** *இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்தும் அதன் பின்னரும் (இதனகத்துப்பின்னர் "மன்றம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) வாரியபொல ராஜமகா விஹாரை அபிவிருத்தி மன்றத்தின் தற்போதைய உறுப்பினராகவுள்ள அல்லது இத்தால் அமைத் துருவாக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களாக இனிமேல் சேர்த்துக்கொள்ளப்படும் அத்தகைய அத்தனை எண்ணிக்கையி னரான ஆட்களும் (இதனகத்துப்பின்னர் "கூட்டுத்தாபனம்" எனக்*

குறிப்பீடு செய்யப்படும்) "வாரியபொல ராஜமகா விஹாரை அபிவிருத்தி மன்றம்" என்னும் பெயர் மகுடத்தின்கீழ் இடையறா வழியுரிமை கொண்ட கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாதல் வேண்டும் என்பதுடன் அப்பெயர்கொண்டு எல்லா நீதிமன்றங் களிலும் அது வழக்குத் தொடுக்கலாமென்பதுடன் அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம். அத்துடன் பொது இலச்சினை யொன்றை வைத்திருக்கவும், பயன்படுத்தவும் அது விரும்பியாங்கு அதனை மாற்றவும் முழுத் தத்துவமும் அதிகாரமும் கொண்ட தாயிருத்தலும் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

**3**. (1) கூட்டுத்தாபனம் அமைத்துருவாக்கப்படுவதற்கான பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவாயிருத்தல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது :-

(அ) மக்களின் ஆன்மீக மேம்பாட்டிற்கான ஒவ்வொரு அம்சத்திலும் வாரியபொல ராஜமகா விஹாரையை அபிவிருத்தி செய்வதற்கு அவசியமான நடவடிக்கை களை எடுத்தலும் தேவைப்படுத்தப்படும்போது விஹாரைக்கு புதிய சேர்க்கைகளை செய்வதற்கான நடவடிக்கைகளை எடுத்தலும் ;

(ஆ) சமுதாயத்தின் ஒழுக்க விழுமியங்களின் அபிவிருத்திக்கு துணைபுரிதலும் அது தொடர்பாக இயைபான வழிமுறைகளை எடுத்தலும் ;

(இ) பிக்குகளின் கல்வி அபிவிருத்திக்காக பிரிவென மற்றும் வேறு இயைபான சமய நிறுவனங்களைத் தாபித்தல், பேணுதல், முகாமை செய்தல் மற்றும் அபிவிருத்தி செய்தல் என்பவற்றிற்கான நடவடிக்கைகளை எடுத்தல் ;

(ஈ) ஆரம்பப் பாடசாலைகள், நாட் பராமரிப்பு நிலையங்கள், சிறுவர் இல்லங்கள் மற்றும் இல்லங்கள் தொடர்பிலும் அவர்களின் சமய கல்விக்கும் நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துதல் ;

(உ) வறுமை மற்றும் இயலாமை காரணமாக தமது கல்வியைத் தொடரமுடியாத இலங்கை மாணவர்க ளுக்கு நலன்புரி வசதிகள் மற்றும் நன்மைகளை முன்னெடுப்பதற்குத் துணைபுரிதல் ;

(ஊ) பௌத்த பிக்குமாரினதும் பிக்குணிகளினதும் கல்வியை ஊக்குவிக்கும் நோக்குடன் அவசியமான வகுப்புகள், விரிவுரைகள், கருத்தரங்குகள், மாநாடுகள், செயலமர்வுகள், உரையாடல்கள், கலந்துரையாடல்கள், கல்விச் சுற்றுலாக்கள், கண்காட்சிகளை நடாத்துதல் ;

(எ) வறியோர், முதியோர், ஆதரவற்றோர் மற்றும் உடல் , உள ரீதியில் இயலாமைக்குள்ளாகியிருப்போரின் நலனிற்காக இல்லங்களை ஏற்பாடு செய்தலும் இளைஞர்களை ஆக்கபூர்வமான சேவைகளில் ஈடுபடுத்துவதற்காக வாழ்க்கைத் தொழிலும் பயிற்சி மற்றும் பயிற்சி நெறிகளை தொடக்கி வைத்தலும் பேணுதலும் மற்றும் அத்தகைய பயிற்சி நெறிகளைப் பேணுவதற்கும் தொடர்வதற்கும் வருமானத்தை உண்டுபண்ணும் நோக்கத்துடன் வசதிகளை ஏற்பாடு செய்தலும் ;

(ஏ) சமுதாயத்தின் நலனை உறுதிப்படுத்தும் நோக்கொன்றுடன் நோயைக் கட்டுப்படுத்துவதற்கான சுகாதார முகாம்கள், உடற்பயிற்சி, விளையாட்டுகள், மருத்துவ உதவிகள் என்பவற்றிற்கான நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துதல் ;

(ஐ) இலக்கியம், கலை, கைப்பணி மற்றும் இயற்கை வளங்கள் தொடர்பில் சமுதாயத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்தலும் இலங்கை பாரம்பரியங்களைப் பேணுவதற்காக இயல் நிகழ்ச்சித்திட்டங்களைத் தொடக்கிவைத்தலும் நிறைவேற்றுதலும் ;

(ஒ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களையொத்த குறிக் கோள்களையுடைய உள்ளூர் அல்லது வெளிநாட்டு நிறுவனங்களுடன் இணைந்து செயற்படல் ;

(2) ஓராம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்டுள்ளவராக சட்டத்தின் குறிக்கோள்களை நடைமுறைப்படுத்துகையில் கூட்டுத்தாபனமானது இனம், சாதி, மதம், மொழி, பால் அல்லது அரசியலபிப்பிராய பேதங்களை அடிப்படையாகக் கொள்ளாது நடைமுறைப்படுத்தலை உறுதி செய்தல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்.

**4.** (1) கூட்டுத்தாபனத்தின் முகாமைத்துவ அலுவல்கள் தலைவர், நிறைவேற்றுப் பணிப்பாளர், துணைத்தலைவர், செயலாளர், பிரதிச் செயலாளர், துணைச் செயலாளர், பொருளாளர், பிரதம ஒழுங்கமைப்பாளர் மற்றும் கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமைய தேர்ந்தெடுக்கப்பட்ட ஆறு குழு உறுப்பினர் ஆகியோரைக் கொண்ட முகாமைச் சபையொன்றினால் (இதனகத்துப்பின்னர் "சபை" எனக் குறிப்பீடு செய்யப்படும்) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் 7 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்படும் அத்தகைய விதிகளுக்கும் அமைய நிருவகிக்கப்படுதல் வேண்டும்.

(2) சபை, அதற்குக் குறித்தொதுக்கப்படக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணிகளையும் அல்லது அவற்றுள் எதனையும் செய்வதற்கான தத்துவங்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(3) முதலாவது சபை இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர் முந்திய நாளன்று பதவி வகிக்கின்ற மன்றத்தின் பணிப்பாளர் சபையைக் கொண்டமைந்ததாதல் வேண்டும்.

உறுப்பாண்மையும் உறுப்பினர்கள் இடாப்பும்.

**5.** சபை, உறுப்பினர்களின் இடாப்பொன்றை வைத்திருக்கச் செய்வித்தல் வேண்டும். அதில் இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு முந்திய நாளன்று மன்றத்தின் உறுப்பினராகவிருக்கும் ஒவ்வோராளும் அத்துடன் அதன்பின்னர் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினரொருவராகச் சேர்த்துக் கொள்ளப்படும் ஒவ்வோராளும் அவரது பெயரை எழுதுவித்தல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் தத்துவம்.

**6.** இச்சட்டத்தினதும் எழுத்திலான வேறேதேனும் சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கமைய கூட்டுத்தாபனம், -

(அ) கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களுக்காகத் தேவைப்படக் கூடிய காணிகளை அல்லது கட்டிடங்களைக் கொள்வனவு செய்வதற்கும், வாடகைக்கு எடுப்பதற்கும், நிர்மாணிப்பதற்கும் அல்லது வேறுவகையில் பெறுவதற்கும் ;

(ஆ) கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களுக்காகச் சபையின் அங்கீகாரத்துடன் அரசாங்க அங்கீகாரம் பெற்ற வங்கிகள் மற்றும் வேறு நிறுவனங்கள் என்பவற்றிலிருந்து கடன்களைப் பெறுவதற்கு அல்லது பணம் திரட்டுவதற்கு ;

(இ) செலாவணி உண்டியல்கள், காசோலைகள், வாக்குறுதிப்பத்திரங்கள் அத்துடன் உரிபெயர் தகுசாதனங்கள் என்பவற்றைத் தயாரிக்கவும், வரையவும், கையேற்கவும், கழிவு வழங்கவும், புறக்குறிப்பிடவும், உரிபெயர்க்கவும், கொள்வனவு செய்யவும், விற்பனை செய்யவும் வழங்கவும், வங்கிக் கணக்குகளைத் திறக்கவும், செயற்படுத்தவும், பேணவும், மூடவும் ;

(ஈ) கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களுக்காக உடனடியாகத் தேவைப்படாத எவையேனும் நிதிகளைச் சபை பொருத்தமானதெனக் கருதுகின்றவாறான அத்தகைய முறையில் முதலீடு செய்வதற்கும் ;

(உ) ஒப்பப்பணங்கள், மானியங்கள், நன்கொடைகள் அல்லது எல்லா வகையிலுமான அன்பளிப்புகளைப் பரிந்து கேட்கவும், கையேற்கவும் ;

(ஊ) எவரேனும் ஆளுடன் ஏதேனும் கம்பெனியுடன் அல்லது ஆட்கள் குழுவுடன் உடன்படிக்கைகளை அல்லது ஒப்பந்தங்களைச் செய்யவும் ;

(எ) ஏதேனும் நிலையான ஆதனத்திற்கு அல்லது தனிப்பட்ட ஆதனத்திற்கு ஏற்புடைய ஏதேனும் சட்டமுறையான நம்பிக்கைப்பொறுப்புகள் மற்றும் நிபந்தனைகளைப் பொறுப்பேற்கவும், ஏற்றுக்கொள்ளவும், எழுதி நிறைவேற்றவும், நடைமுறைப்படுத்தவும், நிருவகிக்கவும் ;

(ஏ) கூட்டுத்தாபனத்தின் அலுவலர்களையும், சேவையாளர்களையும், நியமனஞ் செய்யவும், தொழிலுக்கமர்த்தவும், பதவி நீக்கஞ்செய்யவும், அவர்களின் சேவையை முடிவுறுத்தவும், கூட்டுத்தாபனத்தால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய சம்பளங்கள், படிகள் மற்றும் பணிக்கொடைகள் என்பவற்றைக் கொடுப்பனவு செய்யவும் ;

(ஐ) கூட்டுத்தாபனத்தின் நோக்கத்திற்காக ஆளணியினரை இலங்கையில் அல்லது வெளிநாடுகளில் பயிற்றுவிக்கவும் ;

(ஒ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை முறையாகவும் பயனுறுதியுடனும் நிறைவேற்றுவதற்கு அவசியமான அல்லது உசிதமான அத்தகைய எல்லாக் காரியங்களையும், கருமங்களையும் செய்வதற்கும்,

தத்துவமுடையாதாதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் விதிகள்.

**7.** (1) காலத்துக்குக்காலம், கூட்டுத்தாபனத்தின் ஏதேனும் பொதுக் கூட்டத்தில் சமுகமாயிருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களில் மூன்றில் இரண்டிற்குக் குறையாத வாக்குப்பெரும்பான்மை கொண்டும் பின்வரும் கருமங்களுக்காக இச்சட்டத்தினது அல்லது எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தினது ஏற்பாடுகளுடன் ஒவ்வாதனவாகவிராத விதிகளைக் ஆக்குதல் கூட்டுத்தாபனத்துக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும் :-

(அ) உறுப்பினர்களைச் சேர்த்துக்கொள்ளுதலும், உறுப்பாண்மையை வகுப்பாக்கம் செய்தலும் உறுப்பினர்களால் செலுத்தப்படற்பாலதான கட்டணங்கள், உறுப்பினர்களை விலக்குதலும் அவர்கள் விலகுதலும்;

(ஆ) சபைக்குப் பதவி தாங்குநர்களைத் தேர்ந்தெடுத்தல், பதவிதாங்குநர்கள் பதவியை வறிதாக்குதல் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுதலும் நிறைவேற்று சபையின் தத்துவங்களும், கடமைகளும், பணிகளும், அவர்களின் நடத்தையும் ;

(இ) கூட்டுத்தாபனத்தின் பல்வேறு அலுவலர்களினதும் முகவர்களினதும் சேவையாளர்களினதும் தத்துவங்களும், கடமைகளும், பணிகளும் ;

(ஈ) கூட்டுத்தாபனத்தின் கூட்டங்களைக் கூட்டும்போதும் நடாத்தும்போதும் அனுசரிக்கப்படவேண்டிய நடவடிக்கை முறையும், அத்தகைய கூட்டங்களின் நேரங்களும், இடங்களும், அறிவித்தல்களும், நிகழ்ச்சிநிரலும், கூட்டநடப்பெண்ணும் மற்றும் அதன் அலுவல்களை நிறைவேற்றுதலும் ;

(உ) சபையினதும் கூட்டுத்தாபனத்தினதும் உறுப்பாண்மைக்கான தகைமையும் ;

(ஊ) கூட்டுத்தாபனத்தின் ஆதனத்தை நிருவகித்தலும் முகாமை செய்தலும் அதன் குறிக்கோள்களை எய்துதலும்.

(2) கூட்டுத்தாபனத்தின் விதிகள், (1) ஆம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட விதி ஒன்று போன்ற அதேவிதமான கூட்டத்திலும் அதேபோன்ற முறையிலும் திருத்தப்படலாம், மாற்றப்படலாம், அதற்கு எதுவும் சேர்க்கப்பட லாம் அல்லது நீக்கப்படலாம்.

(3) கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்கள் கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமைந்தோராதல் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் நிதியம்.*

**8**. (1) கூட்டுத்தாபனம் அதன் சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்துக்கு கொடைகள், இறுதிவிருப்பாவணக் கையளிப்பு, நன்கொடை, ஒப்பப்பணம், உதவுதொகைகள், கட்டணங்கள் அல்லது மானியக்கொடைகள் என்றவகையில் கிடைக்கப்பெற்ற எல்லாப் பணங்களும் சபையால் தீர்மானிக்கப் பட்ட ஒரு வங்கியில் கூட்டுத்தாபனத்தின் வரவுக்கு வைப்பிலிடப்படுதல் வேண்டும்.

*கணக்குகளும் கணக்காய்வும்.*

**9**. (1) கூட்டுத்தாபனத்தின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனமானது அதன் வருமானம் மற்றும் செலவினம், சொத்துக்களும் பொறுப்புகளும் அத்துடன் கூட்டுத்தாபனத்தின் மற்றெல்லாக் கொடுக்கல் வாங்கல் பற்றிய முறையான கணக்குகளை வைத்திருக்கச் செய்வித்தல் வேண்டும்.

(3) கூட்டுத்தாபனத்தின் கணக்குகள் தகைமைபெற்ற கணக்காய்வாளர் ஒருவரால் கணக்காய்வு செய்யப்படல் வேண்டும்.

(4) இப்பிரிவில் "தகைமை பெற்ற கணக்காய்வாளர்" என்பது–

(i) இலங்கைப் பட்டயக்கணக்காளர் நிறுவகத்தின் அல்லது சட்டத்தால் தாபிக்கப்பட்ட வேறு ஏதேனும் நிறுவகத்தின் உறுப்பினர் ஒருவராக இருப்பவரும் கணக்காய்வாளர் ஒருவராகத் தொழில்புரிவதற்கு அத்தகைய நிறுவகத்

தின் பேரவையால் வழங்கப்பட்ட சான்றிதழொன்றை வைத்திருப்பவருமான தனியாள் ஒருவர் ; அல்லது

(ii) எந்தக் கணக்காளர் கழகத்தின் வதிவுள்ள பங்காளர் ஒவ்வொருவரும் இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் அல்லது சட்டத்தால் தாபிக்கப்பட்ட வேறு ஏதேனும் நிறுவகத்தின் உறுப்பினரொருவராக இருப்பதுடன் கணக்காளர் ஒருவராகத் தொழில்புரி வதற்கு அத்தகைய நிறுவகத்தின் பேரவையால் வழங்கப்பட்ட சான்றிதழொன்றை உடையவருமாக உள்ளாரோ அந்தக் கணக்காளர் குழுமம் என்று பொருள்படும்.

கூட்டுத்தாபனத்தினால் செலுத்தப்படவுள்ளனவும் கூட்டுத்தாபனத்திற்குச் செலுத்தப்படற்பாலனவுமான தனிசுகள்.

**10**. இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று மன்றத்தின் எல்லாத் தனிசுகளும் பொறுப்புக்களும் கூட்டுத் தாபனத்தால் செலுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன், அந்நாளன்று மன்றத்திற்கு வருமதியாக உள்ள எல்லாத் தனிசு களும் மன்றத்திற்குச் செலுத்தப்படற்பாலனவான ஒப்பப்பணங்க ளும், உதவுதொகைகளும் இச்சட்டத்தின் நோக்கத்திற்காகக் கூட்டுத்தாபனத்திற்குச் செலுத்தப்படுதலும் வேண்டும்.

கூட்டுத்தாபனம் கலைக்கப்படுவதன் மீது எஞ்சியிருக்கும் ஆதனம்.

**11**. கூட்டுத்தாபனம் கலைக்கப்படுவதன்மீது அதன் எல்லாத் தனிசுகளும் பொறுப்புக்களும் செலுத்தித் தீர்க்கப்பட்டதன் பின்னர் எத்தன்மையதான ஏதேனும் ஆதனம் எஞ்சியிருப்பின் அத்தகைய ஆதனம் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிக்கப்படுதலாகாது. ஆனால் கூட்டுத்தாபனத்தின் குறிக் கோள்களை ஒத்த குறிக்கோள்களை உடையதும் அல்லது உடைய னவும், ஏதேனும் வருமானத்தை அல்லது ஆதனத்தை அதன் அல்லது அவற்றின் உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிக்கப்படு வதினின்று அதன் அல்லது அவற்றின் விதிகளால் தடைசெய்யப் பட்டதும் அல்லது தடைசெய்யப்பட்டவையுமான ஏதேனும் வேறு நிறுவனத்திற்கு அல்லது நிறுவனங்களுக்குக் கொடுக்கப்படுதல் அல்லது மாற்றப்படுதல் வேண்டும். அத்தகைய நிறுவனம் அல் லது நிறுவனங்கள், கூட்டுத்தாபனம் கலைக்கப்படுவதன்மீது அல் லது அதற்குமுன்னர் உறுப்பினர்களால் தீர்மானிக்கப்படலாம்.

**12.** 7 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமையவும் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகவும் கூட்டுத்தாபனமானது ஏதேனும் கொள்வனவு, மானியக்கொடை, கொடை, கொடுத்து மாற்றல், மரணசாதனக் கையளிப்பு ஆகியவற்றின் பயனைக் கொண்டு அல்லது வேறுவகையாக அதற்குரித்தாக்கப்படக்கூடிய ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தைக் கொள்ளவும், வைத்திருக்கவும் கூட்டுத்தாபனம் சட்டப்படி ஆற்றலும் தகுதியும் உடையதாதல் வேண்டுமென்பதுடன், அவற்றை விற்க, ஈடுவைக்க, குத்தகைக்குக் கொடுக்க, கொடுத்து மாற்ற அல்லது வேறுவகையில் கையுதிர்க்க முழுத்தத்துவத்தையும் கொண்டிருத்தலும் வேண்டும்.

*கூட்டுத்தாபனம் அசைவுள்ளதும் அசைவற்றதுமான ஆதனத்தை வைத்திருக்கலாம்.*

**13.** கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது சபை தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய ஆளின் கட்டுக்காப்பில் இருத்தல் வேண்டுமென்பதுடன் தலைவர் மற்றும் விதிகளால் ஏற்பாடுசெய்யக்கூடியவாறான சபையின் வேறு உறுப்பினர் முன்னிலையிலன்றி எத்தகையதுமான சாதனமெதிலும் பொறிக்கப்படுதலாகாது. அவர்கள் தாங்கள் சமுகமாயிருந்தமைக்கு அடையாளமாக அச்சாதனத்தில் அவர்களது பெயர்களை எழுதிக் கையொப்பமிடுதல் வேண்டும். அவ்வாறு கையொப்பமிடுதலானது எவரேனுமாள் சாட்சிக்காரராகக் கையொப்பமிடுவதிலிருந்து தனிவேறானதாதல் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் இலச்சினை.*

**14.** இச்சட்டத்தில் அடங்கியுள்ள எதுவும் குடியரசின் உரிமைகளையேனும், ஏதேனும் அரசியல் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவின் உரிமைகளையேனும் பங்கப்படுத்துதலோ அல்லது பாதித்தலோ ஆகாது.

*குடியரசினதும் மற்றையோரினதும் உரிமைகளைப் பேணுதல்.*

**15.** இச்சட்டத்தில் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்